தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 15373 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.09.</u>**

| | |
|---|---|
| முன்னிலை : | திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் : | டாக்டர் எஸ். தங்கமணி,<br>" அன்பினியம்"<br>கொல்லன்விளை,<br>கருங்கல் அஞ்சல்,<br>கன்னியாகுமரி மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு : | பொதுத் தகவல் அலுவலர்,<br>செயல் அலுவலர் அலுவலகம்,<br>கருங்கல் பேரூராட்சி,<br>கன்னியாகுமரி மாவட்டம். |

--------

மனுதாரர் டாக்டர் எஸ். தங்கமணி விசாரணைக்கு வரவில்லை. திரு. சி. முருகன், பில் கலெக்டர், கருங்கல் பேரூராட்சி இவ்வாணையத்தில் இன்று (24.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 31.03.08 அன்று 5 இனங்களில் தகவல் கேட்டு பொதுத் தகவல் அலுவலர், கருங்கல் பேரூராட்சி அவர்களிடம் மனு செய்துள்ளார். மனுதாரருக்கு 01.05.08 அன்று தகவல்கள் தரப்பட்டுள்ளன. 25.06.08 அன்று இவ்வாணையத்திற்கு சரியான தகவல்

தரப்படவில்லை என்று மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையம் 03.03.09 அன்று மனுதாரருக்கு உரிய தகவலை தருமாறு ஆணையிட்டு உள்ளது. 24.06.09 அன்று இவ்வாணையத்திற்கு மீண்டும் மேல்முறையீடு செய்த மனு இன்று (24.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் விசாரணைக்கு வராததால் பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரிக்கப்பட்டது. 15.09.09 அன்று மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டதாகவும், மனுதாரர் கையொப்பம் இட்டு பெற்றுக் கொண்டதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். மனுதாரருக்கு முழுத் தகவலும் வழங்கப்பட்டதாலும், மனுதாரர் பெற்றுக் கொண்டதாக கையொப்பம் இட்டுள்ளதாலும் இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 30.09.09** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**( சு. மோகன தாஸ் )**
**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். 15373/09</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
செயல் அலுவலர் அலுவலகம்,
கருங்கல் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

டாக்டர் எஸ். தங்கமணி,
" அன்பினியம்"
கொல்லன்விளை,
கருங்கல் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.